23rd August 1960]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Supply of electricity to Kodikkarai

* 342 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா (பாயின்ட் கலிமீர்) கோடிக்கரை வாசிகள் பகுதிக்கு மின்சார வசதி எப்போது கிடைக்கும்?

THE HON. SRI V. RAMAIAH : The South Madras Electric Supply Corporation, the licensee of the area, have investigated into a scheme for extending supply of electricity to Kodikkarai but could not take up the scheme as it was found not remunerative.

SRI A. VEDARATHNAM : இந்தியாவிலேயே நம்முடைய மாகாணம்தான் மின்சார விஷயத்தில் முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் தஞ்சாவூர் ஜில்லா மாத்திரம் தாயில்லாப் பிள்ளை போல் இருக்கிறது. இங்கு கோடிக்கரையில் மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டுமென்று பல்வேறு இடங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்திருந்தும்கூட அதற்கு விமோசனம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகையால் இதை விஸ்தரிக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : சமீப காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் கோடிக்கரையைப் பொறுத்தவரை அதிக விஸ்தரிப்பில்லை என்று அங்கு நன்றாகப் பரிசிலனை செய்து இப்பொழுது அந்த ஊரிலே லைசன்ஸ்தாரர்களுக்கு பல உதவிகளைக் கொடுத்து விஸ்தரிக்கச் செய்கிறோம். லைசென்ஸ்தாரர்கள் முடியவில்லை என்றால் சர்க்காரோ, மின்சார போர்ட்டோ விஸ்தரிப்பை மேற்கொள்ள ஏற்பாடு செய்யும். லைசன்ஸ்தாரர்களைப் பொறுத்த மட்டில் எல்லா முயற்சிகளும் எடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு பர்சன்டேஜ் கொடுக்கிறோம். லைசென்ஸ்தாரர்கள் கேட்கும் குறைந்த பட்சம் உத்தரவாதத்தை ஊர் மக்கள் கொடுக்கும் பட்சத்தில் லைசென்ஸ்தாரர்கள் திட்டத்தை மேற்கொள்ளமுடியும். இதை விஸ்தரிக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்கிறோம்.

Electrification of villages

* 384 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் திட்டமிட்டபடி கிராமங்களுக்கு மின்சார இணைப்புகள் தரப்படுகின்றனவா?

(ஆ) இல்லையாயின், அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) Does not arise.